திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியிலே படிக்கிற காலத்தில், ஏரிகள் மாவட்டம் என்றால் எந்த மாவட்டம் என்று ஒரு கேள்வி வரும். அதற்கு நாம் செங்கல்பட்டு மாவட்டம் என்று விடைத்தாளில் பதில் எழுதியிருக்கிறோம். அந்த ஏரிகள் நிறைந்த மாவட்டத்தில், என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் இருக்கக்கூடிய மதுராந்தகம் ஏரி, மிகவும் பரந்து விரிந்த ஏரி. இந்த ஏரியினுடைய பாசனத்தை நம்பி கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கடந்த ஆண்டு, தண்ணீர் இல்லாத காரணத்தால், ஆயிரம் ஏக்கர் பயிர் கருகிவிட்டது. எஞ்சிய 4 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்ய முடியவில்லை. மிகவும் பரந்து விரிந்த மதுராந்தகம் ஏரியைத் தூர்வார வேண்டுமென்று அரசை தயைகூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். கடந்த 16–6–2017 அன்று எனது கன்னிப் பேச்சின்போது இதே கோரிக்கையை வைத்தேன். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே தூர்வாரப்படும் என்று இந்த மன்றத்திலே ஓர் உத்தரவாதத்தைக் கொடுத்தார்கள். ஆனால், இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. எனவே, தயவுகூர்ந்து, மதுராந்தகம் ஏரியைத் தூர்வாரி, விவசாயிகளின் வயிற்றிலே பால் வார்க்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். வணக்கம்.*

(ஆ ஆ) பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகம் குறித்த தெளிவான சுற்றறிக்கை அனுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

***திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில்* plastic *பொருட்களின் உபயோகம் தடை செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது. அது வரவேற்கத்தக்கது. ஆனால், இப்போதும்* Lays chips, plastic cover*–ல்தான் வருகிறது.* Plastic tumbler *தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இப்போதும்* TATA company*–யின் ஒரு குளிர்பானம்* plastic tumbler*–ல்* seal *போடப்பட்டு வருகிறது. அதேபோல்,* plastic straw *தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால்,* Frooti juice, plastic straw*–வுடன்தான் வருகிறது. ஆகவே, நம்முடைய அரசு, அரசு அதிகாரிகள் உட்பட பொது மக்களுக்கும்,*

வியாபாரப் பெருங்குடி மக்களுக்கும் இதன் உபயோகம் குறித்த ஒரு தெளிவான சுற்றறிக்கையை அனுப்பி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(ஆஇ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிப் பயன்பாடு, உயர்மின் கோபுரம் அமைத்தல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள விதிமுறைகளைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) ஏதோ கேட்க வேண்டும் என்று சொன்னீர்களே!*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதி குறித்து கேட்கிறார்கள். தாங்களே அழைத்து வாய்ப்புக் கொடுப்பதால், நானும் தொகுதி குறித்து கேட்கலாம், ஆனால், எங்கள் மாவட்டத்தில் தேர்தல் விதிமுறைகள் அமலில் இருப்பதால், நான் கேட்க முடியாது. ஆகையால், நான் எப்போதும் பொதுநலவாதி; இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக சேர்த்துக் கேட்கிறேன்.* Finance Minister *இருக்கிறார். அன்றைக்கே பேசினேன்.* Evasive Order *கொடுத்து விட்டீர்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு ரூ.2.5 கோடி கொடுக்கிறீர்களே தவிர, ** அதிலே இந்தச் செலவு செய்யுங்கள், அந்தச் செலவு செய்யுங்கள் என்று. . .*

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தாங்கள் கூறிய ** என்ற வார்த்தை அவைக் குறிப்பில் வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. துரைமுருகன்: *அந்த 2½ கோடி ரூபாயில், 'நீங்கள் அந்தப் பணிகளை செய்யுங்கள், இந்தப் பணிகளைச் செய்யுங்கள்' என்று அரசாங்கம் சொல்கிறது. நீங்கள் செய்ய வேண்டியதையெல்லாம் சேர்த்து எங்களைச் செய்யச் சொல்கிறீர்கள். நான் முழுக்க முழுக்கச் சொல்கிறேன். அந்த 2½ கோடி ரூபாயையும்* M.L.A.–*க்கள் அவர்கள் இஷ்டத்திற்கு தொகுதியில் செலவு செய்வதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். அனுமதி கொடுங்கள். (மேசையைத் தட்டும்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

LEGISLATIVE ... YOUTH ALONE TRIUMPHS